**Tuesday, September 1, 2026**

**Start time 03:44 PM**

III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

**O.S.64/2022**
**TNTR09-000129-2022**

Deposition of witness for the CW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 01-09-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : கதிரேசன் | Village | : |
| Father's / Husband's Name | : புருஷோத்தமன் | Calling | : |
| Age | : | Taluk | : |

**நீதிமன்ற விசாரணை**

நான் பிரதிவாதி. வாதி எனக்கு எதிராக இந்த வழக்கை ஒப்பந்தத்தை குறித்த வகையில் நிறைவேற்ற கோரும் ஏற்றதை ஆற்றுக பரிகாரமும், மாற்றாக கிரைய முன்பணம் ரூ.62,15,050/-யை திரும்ப கொடுக்க கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார். நான் இவ்வழக்கில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பூந்தமல்லி துணை சமரச மையத்திற்கு இவ்வழக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு இரு தரப்பினரும் பேசி ஒரு சமரச உடன்படிக்கை எங்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி நான் வாதிக்கு ரூ.35 லட்சத்தை திரும்ப கொடுத்துவிட வேண்டியது என்றும் வாதி வழக்கு சொத்தின் பேரில் 27.02.2018 தேதியிட்ட கிரைய உடன்படிக்கையின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எதுவும் செய்வதில்லை என்றும் வாதி வழக்கை வாபஸ் வாங்குவதென்றும் பேசி முடிக்கப்பட்டது. இதன்படி 31.08.2026 ஆம் தேதிக்குள் நான் வாதிக்கு ரூ.35 லட்சத்தை கொடுத்துவிடுவதென்றும் வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்து இருக்கின்ற வழக்கு சொத்தின் அசல் கிரைய பத்திரம் 01.03.2004 தேதியிட்டதை எனக்கு திரும்ப கிடைக்க வாதிக்கு ஆட்சேபனை இல்லை என்றும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கு இன்றைய தினம் கோப்பிற்கு வருவதால் எங்கள் இருவருக்கும் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் வாதிக்கு

ரூ.35 லட்சத்தை இந்நீதிமன்றம் முன்பாக இன்று வரைவோலை மூலமாக கொடுக்க இரு தரப்பிலும் பேசி முடிக்கப்பட்டது. அதன்படி இன்றைய தினம் வாதி இந்நீதிமன்றம் முன்பாக ரூ.35 லட்சத்திற்கான City Union Bank, அயப்பாக்கம் கிளை வரைவோலையை பெற்றுக்கொண்டுவிட்டார். சமரசர் முன்பாக மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் படி தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும்.

**End Time 03:50 PM**